செய்தி வெளியீடு எண்:372 நாள்: 13.06.2017

செய்தி வெளியீடு

**மாண்புமிகு நகராட்சி, நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் 13.06.2017 (இன்று) சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் ஆய்வுக் கூட்டம் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய கூட்ட அரங்கில் நடைபெற்றது.**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் 13.06.2017 இன்று சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் செயல்பாடுகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய கூட்ட அரங்கில் நடைபெற்றது.

மேலும், இக்கூட்டத்தில் சிறப்புத் திட்ட துறையின் செயலாக்கத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் தமிழக அரசின் முதன்மைத் திட்டமான மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விதி 110ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மற்றும் அரசின் பல்வேறு அறிவிப்புகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான ஆய்வு மேற்கொண்டார்கள்.

இக்ககூட்டத்தில் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், திரு ஹன்ஸ்ராஜ் வர்மா இ.ஆ.ப அவர்கள் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் இயக்குநர் முனைவர் K.இராதாகிருஷ்ணன், மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9